# தை மகளே! வருக!



காவிரியில் நீர்பெருகக்
கழனியெங்கும் நெல்விளையக்
கண்குளிரத் தைமகளே! வருக!
பூவிரியத் தேன்சொரியப்
பொங்கும்இன்பம் எங்கும்வரப்
பொன்விடியல் எங்களுக்குத் தருக!

மண்குளிர மரம்குளிர
மகரந்தம் குளிர, எங்கள்
மனங்குளிரத் தைமகளே! வருக!
தண்குளிரின் மென்பனியில்
தரையெங்கும் புல்குளிரத்
தாவிஎழும் புத்துணர்ச்சி தருக!

தென்புலத்தார் அன்புளம்போல்
திராட்சை,ஏலம், முந்திரியைச்
சேர்த்திணைக்கும் தைமகளே! வருக!
கன்னலிலே சாறெடுத்துக்
கட்டிவெல்லப் பாகெடுத்துக்
கனியமுத நெய்ப்பொங்கல் தருக!

தூணாகித் தாங்கிநின்று
சோறூட்டும் உழவருக்குத்
துணையாகித் தைமகளே! வருக!
வீணாகிக் கடலுக்குள்
விழும்ஆற்று வெள்ளத்தை
விளைகின்ற பூமிக்குத் தருக!

ஆதிமொழி யானதமிழ்
அன்னைஇங்கே ஆட்சிமொழி
ஆகும்எனத் தைமகளே! வருக!
சாதிமதப் பூசலெனும்
சழக்குகள் அழுக்குகளைச்
சலவைசெய்து சமத்துவத்தைத் தருக!

கடந்துவந்த கவலைகளைக்
காலடியி லே,மிதித்துக்
கைகொடுக்கும் தைமகளே! வருக!
நடந்தவையோ பயிற்சிஎன்றும்
நாளைஉண்டு மகிழ்ச்சிஎன்றும்
நம்பிக்கை அனைவருக்கும் தருக!

மலர்பொலியும் எழில்நிரப்பி,
மார்கழியை வழியனுப்பி
மணம்பரப்பித் தைமகளே! வருக!
புலர்பொழுதின் ஒளிதிரட்டிப்
பொய்மைகளின் இருள்விரட்டிப்
புதுமைகளை அறிவியலாய் தருக!

பார்வியக்கும் திராவிடரின்
பண்பாட்டு விழுமியத்தைப்
பறைசாற்றித் தைமகளே! வருக!
ஆரியப்பூ ணூலுநரை
ஆணவ,வாய் நீளுநரை
அனுப்பிவைக்கும் நாள்குறித்துத் தருக!

வல்லார்நம் "தளபதி"யின்
வரலாற்றுச் சாதனையை
வாழ்த்தவரும் தைமகளே! வருக!
"நல்லாட்சி நாயகரின்"
நலத்திட்டம் அத்தனையும்
நாட்டுமக்கள் பயனடையத் தருக!

இல்லாமை கல்லாமை
இல்லாத காலம், இதோ
எழுந்ததெனத் தைமகளே! வருக!
எல்லாமும் எல்லார்க்கும்
ஏற்றபடி வாய்த்ததெனும்
இனியதமிழ்ப் புத்தாண்டைத் தருக!

கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**



# திருவள்ளுவர் பேரறிவுச் சிலை வெள்ளிவிழாவின் வியத்தகு பயன்கள்!





ஈராயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகத்தில் வாழ்ந்த,உலக மக்கள் அனைவரும் வாழ் வாங்கு வாழ்ந்து சிறக்க வழிகாட்டிய மெய்ப்பொருள் அறிஞன் திருவள்ளுவன்.அவன் படைத்த ஒப்பற்ற நூலாகிய திருக்குறளை உலகம் கற்று உயர, தக்க சீர் மிகு பணிகளை எண்ணி எண்ணிச் செய்த ஏந்தல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆவர். அவற்றில் ஒன்று முக்கடல் கூடும் குமரி முனையில் நிறுவப்பட்ட உயர்ந்தோங்கிக் காட்சி தரும் திருவள்ளுவர் பேரறிவுச் சிலையாகும்.

இருபத்தைந்து ஆண்டுகள் அறநெறியின் சின்ன மாய்க் காட்சி தந்து கொண்டிருக்கும் அச்சிலையின் வெள்ளிவிழாவைக் கொண்டாடும் அரிய வாய்ப்பு, திரா விட மாடல் எனச் சொல்லி, 'திருக்குறள் காட்டும் நெறிப் படி தமிழ்நாட்டை ஆளும்' அஞ்சாமை,ஈகை,அறிவு, ஊக்கம்,தூங்காமை, கல்வி,துணிவுடைமை,கொடை அளி,செங்கோல்,குடியோம்பல்,இன்சொல், காட்சிக்கு எளிமை,செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்பு,முறை செய்து காக்கும் நேர்மை,இயற்றல்,ஈட்டல்,காத்தல் வகுத்தலில் தேர்ச்சி எனத் திருவள்ளுவன் காட்டும் இறைமாட்சியின் இலக்கணமாய் இலங்கும் தமிழ் நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கட்குக் கிட்டியிருக்கிறது.

**புலவர். மு.படிக்கராமு**
குறள்நெறி பரப்பும் தகைமையாளர், திருநெல்வேலி



"எய்தற் கரியது இயைந்தக் கால் அந்நிலையே செய்தற் கரிய செயல்" (489) என்னும் காலம் அறிதல் குறளுக்கு எடுத் துக்காட்டாய் இலங்கும் முதல் வர் அவர்கள், 'நல்லது செய்வ தில் எல்லாம் முதல்வர்' ஆகத் திகழ்ந்து வருகிறார்கள். செய்த செயல்களும் செய்யத் திட்டம் வகுத்துத் தந்த செயல் களும், வள்ளுவத்தை வாழ்வியலாக்க வேண்டும் என்பதில் எத்தகைய திண்ணிய நெஞ்சினயராக முதலமைச்சர் அவர்கள் விளங்குகிறார்கள் என்பதைத் தெற்றனப் புலப்படுத்துகிறது.

திருக்குறள் நெறிகளில் பலவற்றை வேறொரு கோணத்தில் பரப்பிய வீரத்தவத்தர் விவேகானந்தர் மண்டபத்துடன் திருவள்ளுவர் பேரறிவுச் சிலையின் அடித்தளத்தை இணைக்கத் தொழில் நுட்பத்துடன் கண்ணாடி இழைப் பாலம் அமைத்து மக்கட்கு எளிய இனிய வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறீர்கள்.

மாணவர்களை, மாண்புகளை ஆக்குபவர்களாய் உருவாக்கிவிட்டால் நாடு எதிர் காலத்தில் ஏற்றம் பெறும் என்னும் நன்னோக்கால் உந்தப்பட்டு மாணவர்கட்கு திருக்குறள் ஒப்பித்தல் போட்டி, பேச்சுப்போட்டி, கட்டு ரைப் போட்டி, ஓவியப் போட்டி,இசைப் போட்டி எனப் பல்வேறு போட்டிகள் நாடு முழுமையும் மாவட்ட வாரி யாக நடத்தி வெற்றி பெற்றவர்கட்குப் பரிசு மழை வழங் கித் திருக்குறள் மீது ஆர்வமும் ஈடுபாடும் கொள்ளச் செய்திருக்கிறீர்கள்.

ஐயன் திருவள்ளுவனின் பேரறிவுச் சிலையின் வெள்ளி விழாவில் குறள்நெறி பரப்பும் தகைமையாளர் 22 பேர் திருவள்ளுவரின் சிலையின் காலடியில் வைத்து வான் மழை வாழ்த்த, கடலலை இசைமுழக்க முதலமைச்சர் அவர்கள் பரிசும் சான்றும் வழங்கி இனி மையாய், எளிமையாய் ஒரு தமிழ்க் குடும்ப விழாப் போல் நிகழ்த்தி அவர்கள் குறள் பரப்பும் தொண்டு மேலும் தொடர ஊக்கமூட்டினார். தமிழ் வளர்ச்சித் துறை அவர்களைப் பேணிய விதம் மிகச் சிறப்பு.

2024 திசம்பர் 30, 31 மற்றும் 2025 சனவரி முதல் நாள் ஆக மூன்று நாள்களிலும் வடிவமைக்கப் பட்ட அனைத்து நிகழ்வுகளும், வெள்ளி விழாவின் மாண் பினை எடுத்துக் காட்டின. திருக்குறளின் தனிச்சிறப்பு தன்னிகரற்ற தன்மையை, பொதுமை நோக்கை, இனி மையாய், சுவையுடன், உணர்வுடன் எடுத்துரைத்து மக்கள் மனதில் ஆழமாய்ப் பதியுமாறு அருமையான தலைப்புகளில், தகுதியான பெருமக்கள் பட்டிமன்றத்தி லும், கருத்தரங்கிலும் பொழிந்து திருக்குறள் மணம் கன்னியாகுமரியில் மட்டுமல்லாது, உலகத் தமிழர்கள் அனைவரும் கண்டும் கேட்டும் மகிழச் செய்து தங்கள் கடமையை மிகச்சசிறப்பாக நிறைவேற்றி, புதிய திருக் குறட் பற்றாளர்கள் பல்லாயிரம் பேர்களை உருவாக்கி, வெள்ளி விழாவின் நோக்கை இனிதே நிறைவேற்றிக் காட்டினார்கள்.

திருக்குறள் களஞ்சியம் என போற்றுமாறு உருவாக் கப்பட்ட விழா மலர் வெளியிடப்பட்டது. திருக்குறள் பற்றி அறிய வேண்டிய செய்திகளையும், கருத்துகளையும், திருவள்ளுவர் சிலை பற்றி அறிந்து கொள்ளவேண்டிய அனைத்து நிலைகளையும் விளக்கும் கண்காட்சி, கண்காட்சி மட்டுமல்ல கருத்துக் காட்டியாய் மிளிர்ந்தது. 'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என்பதற்கு ஏற்ப குறள் ஒலி இன்னிசையாய் முழங்கி இன்பத்தில் திளைக்க வைத்தது.

தந்தை பெரியார் அவர்கள் திருக்குறள் மாநாடு சிறப் புற நடத்தி, குறள் பரப்பும் பணியைச் சமுதாயப் பணி யாகச் செய்தார்கள். அவர்களை உள்வாங்கிக் கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் பல்கலைக் கழகங்களில் குறளாய்வுக்கு வழிவகுத்தார்கள். அவர் களை உள்வாங்கிக் கொண்டு முத்தமிழ் அறிஞர் கலை ஞர் அவர்கள் செய்த பல்வேறு பணிகளில் ஒன்றே 133 அடி உயரத் திருவள்ளுவர் சிலை. ஐயன் திருவள்ளுவனின் பேரறிவுச் சிலையின் வெள்ளி விழா வில் நம் மாண்பு நிறை முதலமைச்சர் அறிவித்த வருங் காலச் செயல் திட்டம் இருக்கிறதே அஃது அவர்களை எல்லாரினும் மேலான ஆக்கப்பூர்மான செயல் வீரர் என்பதை உணர்த்தி விட்டது. இப்படித் திட்டமிட்டு செயல்படும் முதலமைச்சர் தமிழ்நாட்டிற்கு அமைய மாட்டாரா என 60 ஆண்டுகளாய் கனவு கண்டவன் நான். ஆகவே, அறிவிப்புக் கேட்டவுடன் கிடைத்தற்கரிய பயனுடைய உயர்பொருள் கிட்டியது போல் மகிழ்ந்து என்னை மறந்து கை குவித்து வணங்கினேன்.

நான் வணங்கி வரவேற்கும் திட்டம் வருமாறு: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திருக்குறளில் ஆர்வமும் புலமையும் மிக்க ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி வழங்கி மாவட்டத் தோறும் தொடர் பயிலரங்குகள் பயிற்சி வகுப் புகள் நடத்தப்படும். திருக்குறள் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெறத் திட்டம் வகுக்கப்படும். இதற்காக ஆண்டிற்கு மாவட்டம் ஒன்றுக்கு மூன்று இலக்க ரூபாய் வழங்கப்படும். ஆண்டுக்கு 133 உயர் கல்வி நிறுவனங்களில், திருக்குறள் தொடர்பான கலை இலக் கிய அறிவுசார் போட்டிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தத் திட்டமிடப்படும். ஒவ்வொரு ஆண்டும் திசம்பர் கடைசி வாரம் குறள் வாரம் கொண்டாடப்படும். தமிழ் திறனறி தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான திருக்குறள் மாணவர் மாநாடு ஆண்டு தோறும் நடத்தப் படும். திருக்குறளும் உரையும் அரசு அலுவலகங் களில் எழுதப்படுவது போல, தனியார் நிறுவனங்க ளிலும் எழுதுவதற்கு ஊக்குவிக்க உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இத்தகைய அருமையான திட்டங்கள் செயல்படத் தொடங்கித் தொடர்ந்து இயங்கிவந்தால், திருக்குறளின் ஒளி வீச்சால் நாட்டில் அல்லவை அகன்று நல்லவை பெருகும். அறிவறிந்த, பழிபிறங்காப் பண்புடை நன் மக்கள் தொகை பெருகும். மக்கள் அன்பை அகத்துறுப் பாய் கொள்வர், ஒழுக்கத்தை உயிரினும் மேலாய்க் கருதி வாழ்வர், மக்கள் பிறரைக் குறைகூறார், தம் குற் றத்தைத் தாமே உணர்ந்து திருந்துவர், உலகம் பழித் ததை ஒழித்துப் புகழுடன் வாழ்வர், உள்ளுவ தெல் லாம் உயர்வே உள்ளுவர்; உலகத்து இயற்கை அறிந்து செயல்படுவர்; ஆற்றின் அருமை உடைய செயல்களையே ஆற்றுவர்; இன்னா செய்தார்க்கும் இனியவே செய்வர்; குற்றமிலனாய்க் குடி செய்து வாழ் வர்; வாழ்வாங்கு வாழ்வர். தமிழனைப் பிரிக்கும் தடைக் கற்கள் அகலும். ஏற்றதாழ்வு அகன்று, எல்லா ரும் ஒன்று பட்டு ஒற்றுமையுடன் வாழ்வர்.

இத்தகைய மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் கால்கோள் செய்த முதலமைச்சர் அவர்கள் எண்ணியது எண்ணி யாங்கு நடக்கத் துணை நிற்பது தமிழரின் தலையாய கடமையாகும்.

**வள்ளுவம் பரவ வேண்டும்**
**வாழ்வியல் துலங்க வேண்டும்**
**உள்ளுவது உயர்வு வேண்டும்**
**உரையெலாம் செயலில் வேண்டும்**
**எள்ளுவது தவிர்க்க வேண்டும்**
**ஏதிலார் பொறுக்க வேண்டும்**
**கொள்ளுவது அறமாய் வேண்டும்**
**கொடை வளம் வேண்டும் வேண்டும்.**

# இராயபுரம் தொகுதி - எஸ்.என். செட்டி தெருவில் கழிவுநீர்க் கால்வாய் அமைப்பீர்!

## சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி வலியுறுத்தல்!



சென்னை, ஜன. 13-

சட்டப்பேரவையில் இராயபுரம் தொகுதி கழக உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் கே.என். நேரு அளித்த பதிலும் வருமாறு:-

**ஐட்ரீம் இரா. மூர்த்தி:** இராயபுரம் தொகுதி, எஸ்.என். செட்டி தெருவில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா? ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் கே.என்.நேரு:** இராயபுரம் தொகுதியின் பிரதான சாலையான எஸ்.என். செட்டி தெருவில் அமைந்துள்ள தண்டையார் பேட்டை 'C' கழிவுநீர் அகற்றும் நிலையத்திலிருந்து தண்டையார்பேட்டை 'B' கழிவுநீர் அகற்றும் நிலையத்திற்கு செல்லும் 300 மி.மீ. விட்டமுடைய பழுதடைந்த பழைய வார்ப்பிரும்பு உந்து குழாயை 500 மி.மீ. விட்டமுடைய வார்ப்பிரும்பை சுமார் 800 மி.மீ. உந்துகுழாயாக மாற்றுவதற்கு ரூ.2.72 கோடி மதிப்பீட்டில் மாற்றியமைத்து அனைத்துப் பணிகளும் முடிவுற்று தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மற்றும் தண்டையார் பேட்டை B கழிவுநீர் அகற்றும் நிலையத்தில் இருந்து, தண்டையார்பேட்டை F கழிவுநீர் அகற்றும் நிலையத்திற்கு செல்லும், 500 மில்லிமீட்டர் விட்டமுடைய பழுதடைந்த வார்ப்பிரும்பு இரும்பு உந்து குழாயை 750 மில்லிமீட்டர் விட்ட முடைய வார்ப்பிரும்பு உந்துகுழாயாக 3,600 மீட்டர் நீளத்திற்கு மாற்றுவதற்கு 22.34 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை சுமார் 46 சதவிகிதம் பணிகள், அதாவது 1,660 மீட்டர் நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணிகள் முடி வுற்றுள்ளது. மீதமுள்ள 1,940 மீட்டர் நீளத்திற்கு குழாய்கள் பதிக்கும் பணி 1972025ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கண்ட பணிகள் நிறைவடையும்போது S.N. செட்டித்தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள தெருக்களில் கழிவுநீர் வழிந்தோடுவது தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஐட்ரீம் இரா. மூர்த்தி:** இராயபுரம் Pumping Station A to F வரையில் அண்ணன் அவர்கள் சொன்னதுபோல மொத்தம் 3,600 மீட்டர். அதில் 46% work முடிந்து இருக்கிறது. மீதியிருக்கக் கூடிய 54% work இந்த மழைக் காலம் முழுவதும் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அதனால் அந்தப் பணிகளை விரைவில் முடித்துத்தர வேண்டும். அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல 7 ஆம் மாதத்தில் முடித்துத்தர வேண்டு மென்று கேட்டு கொள்கிறேன். அடுத்து இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் இருக்கக்கூடிய 335 தெருக்கள் இருக்கின்றன. இப்போது Main roadல் இந்த pipe அமைத்து joint செய்கிறோம். தெருக்களில் உள்ள கழிவுநீர் pipe 40 வருடங்களாக பழமையான pipe ஆக இருக்கிறது. அவைகள் 100 mm விட்டமும், 150 mm விட்டமும் உள்ள pipeகளாக இருக்கிறது. அதேமாதிரி குடிநீர் pipeகளும் பழமையானவையாக இருக்கின்றன. எனவே, குடிநீரும், கழிவுநீரும் கசிவு ஏற்பட்டுகிறது. அவைகளை தினமும் பராமரிக்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் கழிவுநீர் குழாய்களையும், குடிநீர் குழாய்களையும் சீர்செய்து தருவார்களா?

**அமைச்சர் கே.என். நேரு:** விரிவான பதிலை சொல்ல வேண்டும். இராயபுரம் சட்டமன்ற தொகுதியில், வண்ணாரப்பேட்டை பணிமனை எண் 48, பழைய வண்ணாரப்பேட்டை பணிமனை எண் 49, காசிமேடு பணிமனை எண் 50, வண்ணாரப் பேட்டை பணிமனை எண் 51, இராயபுரம் பணிமனை எண் 52 மற்றும் தங்கசாலை பணிமனை எண் 53 ஆகிய பகுதிகளில் அடங்கும். இத் தொகுதியில் 3,04,144 மக்கள் தொகுதியும் 546 தெருக்களும் கொண்டதாகும். இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் 11 கழிவுநீர் அகற்று நிலையங்கள்மூலம் 23.30 மில்லியன் லிட்டர் கழிவுநீர் அருகாமையில் கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. இப்போது உறுப்பினர் அவர்கள் கேட்டுகொண்டது போல, வட சென்னையில் இருக்கிற பழைய குடிநீர் குழாயாக இருந்தாலும்சரி, கழிவுநீர் அகற்றுகின்ற குழாயாக இருந்தாலும் சரி அது கிட்டத்தட்ட 50 ஆண்டு காலத்திற்கு மேற்பட்டிருக்கின்ற காரணத்தினால் அவைகள் அனைத்துமே மாற்றப் படவேண்டுமென்ற நோக்கத்தோடுதான், இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வடசென்னை வளர்ச்சித் திட்டம் என்ற அளவிலே 946.43 கோடி மதிப்பீட்டில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பணிகள் சுமார் 2026 ஆம் ஆண்டுக்குள் முடிக்கப் பட்டு வடசென்னை பகுதிகள் சுமார் 47.22 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு, உடனடியாக எங்கு செய்யப் படவேண்டுமென்று சொன்னால், அந்தப் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துசெய்து கழிவுநீர் வழிந்தோடுவது தடுக்கப்படும். எனவே, சட்டமன்ற உறுப்பினர் எந்தப் பகுதி என்று குறிப்பிட்டு சொன்னால் சரியாக இருக்கும்.

**ஐட்ரீம் இரா. மூர்த்தி:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அந்தக்குறிப்பினை உடனடியாக கொடுக்க தயாராக இருக்கிறேன். மேலும் குடிநீரை பொறுத்தவரையில் கீழ்ப் பாக்கம் நீரேற்றும் நிலையத்தில் இருந்து இராயபுரம் நீரேற்றும் நிலையத்திற்கு 25 MLD குடிநீர் வந்துக்கொண்டிருக்கக்கூடிய ஒரு கட்டமைப்பு இருக்கிறது. ஆனால் கடந்த காலங்களில் அங்கே 17 MLD குடிநீர் மட்டுமே பெறப்பட்டு, இதுவரை இராயபுரம் தொகுதி மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மக்கள்தொகை கணக்கை கருத்தில் கொண்டு, 10 ஆண்டுகளுக்கு முன்னதாக கொடுக்கப்பட்ட 17 MLD நீர் போதுமானதாக இல்லை என்பதை கருத்தில் கொண்டு, 25 MLD நீரை இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கு வழங்கவேண்டும்.

**அமைச்சர் கே.என். நேரு:** நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்ற காலத்தில் சென்னையில் நாளொன்று 900 MLD அளவிற்குத்தான் தண்ணீர் கொடுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு 1040 MLD தண்ணீர் கொடுக்கின்ற அளவிற்கு குழாய்களெல்லாம் பதிக்கப் பட்டு மக்களுக்கு கொடுத்துக்கொண்டிருக்கிறோம். குடிதண்ணீரைப்பொறுத்தளவில் கடந்த மொத்த கொள்ளளவு என்பது, நான் இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், குடிநீர் தருவதைப்பற்றி எந்தவிதமான இடைஞ்சலும் இல்லை. உடனடியாக எவ்வளவு தண்ணீர் கேட்டாலும் கொடுக்கக்கூடிய அளவிற்குத்தான் சென்னை குடிநீர் வாரியம் இருந்துகொண்டிருக்கிறது. மொத்த குடிநீரின் கொள்ளளவு 13.22 TMC இருக்கவேண்டும். ஆனால் இன்றைய தேதியில் 15.560.17 TMC தண்ணீர் இருக்கிறது.

எனவே, தண்ணீர் அடுத்த ஆண்டு, ஆறாவது மாதம் மற்றும் ஏழாவது மாதம், ஏன் மழைபொழியும் வரை சென்னைக்கு குடிநீர் கொடுக்கும் அளவிற்கு அனைத்து வசதிகளும் இருக்கின்றன. தேவையான அளவிற்கு தண்ணீரும் இருக்கின்றது. கடந்த ஆண்டின் இருப்பு என்று எடுத்து பார்த்தால் 10 TMC, 11 TMC தான் இருந்தது. கடந்த ஆண்டைவிட கூடுதலாக ஆறரை TMC கூடுதலாகதான் இருந்து கொண்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியில் குடிநீரை அதிகப்படுத்தி தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். எந்தப் பகுதி என்பதையும் அவர் சொல்லியிருக்கிறார். அதுகுறித்து நம் அதிகாரிகளிடம் கலந்துபேசி உடனடியாக அந்தப் பகுதிக்கு கூடுதலாக குடிநீர் வழங்கு வதற்கு ஏற்பாடு செய்து தரப்படும் .

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு பதிலளித்தார்.